# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்:மூன்று கணை: இருபத்தொன்று ஜனவரி -2023



**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

# குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ☞ ஆசிரியரின் உள்ளத்திலிருந்து | 01 |
| ☞ காட்சியும் கருத்தும் | 02 |
| ☞ நிலைபேண் அபிவிருத்திக்கான கல்வி | 03 |
| ☞ "இன்பா"வின் சிந்தனைத் தொடர்கள் -- 12 கதைகளால் நிஜமாகி... | 05 |
| ☞ பெண்ணின் மேன்மை | 06 |
| ☞ வீடு சொல்லும் பாடங்கள | 07 |
| ☞ முயற்சி திருவினையாக்கும் | 08 |
| ☞ Value of teachers in the society | 09 |
| ☞ அனுபவம்தான் குரு | 10 |
| ☞ உன்னை அறிந்தால் | 12 |
| ☞ பேசும் படங்கள்...! | 13 |
| ☞ புத்தகம் | 13 |



☞ குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப் பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள்!

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...



குருசேத்திரம் கணை 21 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். குருசேத்திரம் குழுமமானது தனது இலக்கு நோக்கிய பயணத்தில் சில அடையாளங்களை மக்களிடத்தில் இட்டுவருகின்றது என்பதில் குழுமத்தின் தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். அதே வேளை குருசேத்திரம் அறிவுப்பகிர்வுத் தொடர் 103 நிகழ்சிகளுடன் தற்காலிகமாக செயலறுநிலையில் உள்ளதென்பதுடன் மிக விரைவில் எமது மகுடவாக்கியத்திற்கேற்ப மீள்-எழுச்சி பெறுவோம் என்பதைத் தெரியப்படுத்துகின்றேன்.


இன்றைய செய்தியில் யார் தலைவர்? என்பதுபற்றி நான் வாசித்தவற்றிலிருந்து சில பகுதியை இங்கு பதிவிடுகின்றேன்.

யார் தலைவர்? எல்லாவற்றிலும் சிறப்பானவர் அல்ல தலைவர். எல்லோரையும் விட சிறப்பானவர்களை உருவாக்குபவர்களே சிறந்த தலைவர்கள். ஒரு பெரிய மீன் சிறய மீனை உணவாக்குவதற்காக வாயைத் திறந்த போது, அச்சிறிய மீன், பெரிய மீனைப்பார்த்து உன் பசி நியாய மானது, ஆனால் நானோ மிகச்சிறியவன், உன் பசி அடங்காது. எனவே என்னை விட்டுவிடு என்றது. சற்று சிந்தித்த பெரிய மீன், நீ சொல்வது சரிதான், சரி, அப்படியாயின் நீ என்னைச் சாப்பிடு என்று சிறிய மீனைப் பார்த்துக் கூறியது... சாத்தியமா?.... இப்போ சிறிய மீனின் நிலைபோன்ற மனநிலையில் இருக்கின்ற எமது மக்களின், மாணவர்களின் நிலைபற்றி சிந்திப்பவர்களே உண்மையான தலைவர்கள். இந்த வகையில் நாம் எமது தலைமைத்துவ பாங்குகள் பற்றி சிந்திக்க வேண்டும். எமது கல்லூரியும் குருசேத்திரம் அமைப்பும் சிறந்த தலைவர்களை உருவாக்குவதில் பல தளங்களை உருவாக்கியிருக்கின்ற அதே வேளை எமது சில ஆசிரிய கல்வியியலாளர்களும் மாணவ ஆசிரியர்களும் உலகளாவிய ரீதியில் "எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்" என்ற இவ்வருட மகுட வாக்கியத்திற்கு ஏற்ப தங்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்கள் தாங்களும் தலைவர்களாகி எல்லாவற்றிலும் சிறந்த தலைவர்களை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**

**பிரதம ஆசிரியர்**



# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்



**"குருசேத்திரம்"** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. **குருசேத்திரம் உங்களின் களம்...**

அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ guruseththiram@gmail.com

# நிலைபேண் அபிவிருத்திக்கான கல்வி

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



***நிலைபேண் அபிவிருத்தி என்பது இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதும், எதிர்காலச் சந்ததிகள் ஏற்றத்தாழ்வின்றி தமது தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக அமையும் அபிவிருத்தியாகும்.***

- புருன்ற்லான்ட் ஆணைக்குழு -

சூழலுக்கும் அபிவிருத்திக்குமான ஆணைக்குழுவினால் (World Commission on Enviornment and Development) 1987 ஆம் ஆண்டளவில் நிலைபேண் அபிவிருத்திக்கான அறைகூவலை விடுத்தது. இங்கு இயற்கைக் கட்டுமாணங்களைப் பேணுவதனூடாக வறுமை ஒழிப்பு, சமாதானம், மகிழ்ச்சி போன்ற மனித அடிப்படைத் தேவைகளும் விழுமியங்களும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் பேணப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிலைபேண் அபிவிருத்தி தொடர்பாக யுனெஸ்கோ மூன்று அடிப்படை விடயங்களை முன்னிலைப்படுத்தி அதற்கான செயற்கிரமங்களை அமுல்படுத்தி வருகின்றது. சூழல், பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றிற்கிடையான ஒன்றையொன்று போசிக்கும் நிலை காணப்படவேண்டுமெனவும், இவை திட்டமிடப்பட்ட வகையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

### 01. நிலைபேண் அபிவிருத்திக்கான கல்வி:

மக்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்வதன்மூலம் தானும், மற்றவர்களும் நன்மை பெறுவதுடன் எதிர்காலத்திலும் தான்சார்ந்த சமூகமும், மற்றவர்களும் நன்மை பெறுவதற்காக சமகாலத்தில் மேற்கொள்ளும் திர்மானமாகும். நிலைபேண்கல்விக்கான அணுகுமுறை மனித உரிமைகள், வறுமை குறைப்பு, நிலைபேண் உயிர்வாழ்க்கை, சமாதானம், சுற்றாடல் பாதுகாப்பு, ஜனநாயகம், சுகாதாரம், மண்ணியல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், பால்வகை சமத்துவம், சுதேச கலாசார பாதுகாப்பு போன்ற அடிப்படை அம்சங்களுடன் யுனெஸ்கோ நிறுவனத்தின் தூரநோக்கையும் பணிக்கூற்றையும் போசிப் பதாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையானது நிலைபேண் அபிவிருத்தி

தொடர்பான செயற்பாடுகளுக்காக 2002 ஆம் ஆண்டு 57/254 சரத்தின் மூலம் 10 ஆண்டுகளை (2005-2014) பிரகடனம் செய்துள்ளது. (Decade of Education for Sustainable Development - DESD) இதற்கான செயலாற்றுகைகள் யுனெஸ்கோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட வருகின்றது. இதன் பிரதான நோக்கமாக நிலைபேண்தகு அபிவிருத்திக்காக கல்வியில் கோட்பாடுகளையும் (Principles), மனித விழுமியங்களையும் (Values) பயிற்சியையும் (Practice) ஒன்றிணைத்தலாகும். அதனை அடைவதற்காக 4 உப நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- நிலைபேண் அபிவிருத்தி தொடர்பான பயனாளிகளிடையே ஒத்துழைப்பையும் வலையமைப்பையும் ஏற்படுத்தல்
- நிலைபேண் அபிவிருத்திக்கான தரமான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை முன்னெடுத்தல்
- நிலைபேண் அபிருத்திச் செயற்பாடுகள் மூலம் மிலேனியம் இலக்குகளை அடைவதற்காக உறுப்பு நாடுகளுக்கு உதவி செய்தல்
- நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வியில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகளுக்கு சந்தர்ப்பங்களையும் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்

## 02. UNESCO வின் நிலைபேண்அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான பிரதான செயற்பாடுகள்.

1. “கல்வி அடிப்படை மனித உரிமை” என்பது நிலைபேண்தகு அபிவிருத்திக்கான மக்களின் இயலளவை மேம்படுத்துவதற்காகவும் சமூகக் கோட்பாடுகளை உண்மை நிலைக்கு நிலைமாற்றஞ் செய்யும் ஊடாகமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
2. நிலைபேண் விருத்திக்கான அடிப்படைக் கல்வியை மேம்படுத்தல், பல்வேறு மட்டங்களிலுமுள்ள கல்விச் செயற்பாடுகளை மீள்-திசைமுகப்படுத்தல் மற்றும் பொதுமக்களிடையே நிலைபேண் விருத்தி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், விளங்கிக்கொள்ளுதல் மற்றும் பயிற்சி வழங்குதல் ஆகிய செயற்பாடுகளை யுனெஸ்கொ நிறுவனம் செய்துவருகின்றது.
3. இயற்கைவளங்களைப் பாவிப்பதிலும், மனிதன் - இயற்கைக்கிடையிலான தொடர்பினைப் பேணுவதிலும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஆக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பன்முக ஒழுங்குணர்வு, உள்ளக ஒழுங்குணர்வு கொண்ட அணுகுமுறைகளை ஏற்படுத்துதல்.
4. மக்களின் கலாசார, இருப்பியல் குறிகாட்டிகள் தொடர்பான அவதானம், அவர்களின் பொறுப்பியம், கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
5. தொடர்பாடல்: சமூக நிலைமாற்று வகிபாகத்தில் தொடர்பாடல் தொழில்நுட்பம் உடனடி விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலையில் யுனெஸ்கோ நிறுவனமானது அறிவுப் பகிர்வு, தகவல் பரிமாற்றம், நிபுணத்துவ ஆலோசனை மற்றும் பயிற்சி, விஞ்ஞானரீதியான அணுகுமுறைகளை உருவாக்குதல் - பரப்புதல், நிலை பேண் விருத்தி தொடர்பாக ஊடகங்களுக்கு உணர்வுபூர்வமாக விழிப்பூட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்து வருகின்றது.

*****

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 12

## கதைகளால் நியமாகி...



### உங்கள் மீது கொட்டும் குப்பைகளை பொருட்படுத்தாதீர்கள்




"குருவே என்னால் வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை" என்று வேதனையுடன் சொன்னவனை திரும்பிப் பார்த்த குரு "வருத்தப்படாதை என்ன பிரச்சினை" என்று கேட்டார். "என்னைப் பற்றி குறை கூறுபவர்கள் அதி-கரித்து விட்டார்கள். அவர்களை எப்படி சமாளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை" என்றான் வந்தவன். குரு அவனுக்கு ஒரு சம்பவத்தை சொல்ல ஆரம்பித்தார்.

"அமெரிக்காவில் பரபரப்பான நகரில் ஒரு டாக்சியில் ஒருவர் பயணித்து கொண்டு இருந்தார். காலை நேரம் நிறைய போக்குவரத்து, சிரமப்பட்டுத் தான் வண்டியை ஓட்ட வேண்டி இருந்தது. பல இடங்களில் வாகனங்கள் ஒன்றோடொன்று மோதுவது போல் வந்தன. ஆனால் டாக்சி ஓட்டுநர் எதற்கும் பதட்டப்படவில்லை. இப்படி சுமுகமாக பயணித்து கொண்டிருந்த போது ஒரு திருப்பத்தில் இன்னொரு கார் ஒன்று குறுக்கே வந்துவிட்டது. இரு கார்களும் மோதுவது போல் சென்று மெல்லிய இடை வெளியில் இடிக்காமல் தப்பி விட்டன. தவறு எதிரில் வந்தவனுடையது தான். இருந்தாலும் ஆத்திரத்தில் டாக்சி ஓட்டுநரைத் திட்டினான் ஆனால் ஆச்சரியம்! பதிலுக்கு டாக்சி ஓட்டுநர் அவனைத் திட்டவில்லை அவனைப் பொருட்படுத்தாமல் வண்டியை செலுத்தினார்.


இதே போல் இன்னொரு சம்பவம் அதிலும் டாக்சி ஓட்டுநர் பொறுமை இழக்கவில்லை ஆத்திரப்படவில்லை நிதானமாய் இருந்தார். இதையெல்லாம் பார்த்த இலங்கைய ருக்கு வியப்பு இறங்க வேண்டிய இடம் வந்த போது ஓட்டுநரிடம் கேட்டார்.

"எப்படி இவ்வளவு பொறுமையாய் யாருடைய திட்டுக்கும் பொருட்படுத்தாமல் வண்டியை ஓட்டுகின்றீர்கள்?" அந்த டாக்சி ஓட்டுநர் "என்னுடைய இலக்கு உங்களை நீங்கள் போச்சேர வேண்டிய இடத்தில் சேர்ப்பது. வீதியில் போவோர் அள்ளிக்கொட்டும் குப்பைகளையெல்லாம் என் மனதில் சேர்த்துக்கொள்வது இல்லை அதையெல்லாம் பொருட்படுத்தி ஆத்திரப்பட்டு பதில் சொல்லிக் கொண்டிருப்பதானால் நாம் போச்சேரவேண்டிய இடத்தை அடைய முடியாது".

இந்த சம்பவத்தை குரு சொன்னதும் தான் செய்ய வேண்டியது என்ன என்பது வந்தவனுக்கு புரிந்தது.

**நீதி : இலக்கு தான் முக்கியம் இடையில் வரும் இடையூறுகள் அல்ல.**

# பெண்ணின் மேன்மை



இறைவன் படைப்பினில் ஆண், பெண் எனும் இரு பாலாகும். சமவுரிமை படைத்தவர்களே, உடல் அமைப்பு ரீதியாக மாறுபட்டு இருப்பினும் உரிமைகள் தேவைகள் என்ற அடிப்படையால் ஒத்த இயல்புடையவராகவே கணப்படுகின்றனர்.

**“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா”**

என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாகக் கருதிப் பாடினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு மகத்தானது சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடம் உண்டு.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையகம் தழைக்குமாம்” என முழங்கினார் பாரதி. முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்குத் தனியிடமளித்துள்ளனர் என்பதைச் சங்கநூல்கள் பறைசாற்றுகின்றன. ஔவையார், காக்கைப் பாடினியார், மங்கையற்கரசியார், காரைக்கால் அம்மையார் போன்ற பெண்பாற் புலவர்கள் சிறப்புற வாழ்ந்த வரலாறுகளுண்டு.

இறையடிப்படையில் ஆண்களும் பெண்களும் சமவுரிமை கொண்டவர்களே. ஆண்கள் உயர்த்தவர்கள் என்றும். பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் அறியாமையாகும். குறிப்பாக பெண்கள் அறத்தின் வடிவே பெண்மை. கற்பின் உயர்வே பெண்மை. உயிரியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெண்ணே மூலமாவாள். இதனால்தான் பெண்ணை தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினர். பெண்ணை சக்தியின் வடிவமாக போற்றின சமயங்கள். வாழ்க்கைத்துணையாகவும், வாழவைக்கும். தாயாகவும் வழிநடத்திச் செல்பவள் பெண்ணே. அவளுக்கு ஈடாக எதனையுமே எடுத்துரைக்க இயலாது.

தமிழ்மறை தந்த திருவள்ளுவர். வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறும் போது இல்லறவாழ்வில் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக் கொண்டு ஒற்றுமையாக செயற்பட்டால் வாழ்க்கை சிறப்புறும்.

பண்பட்ட சமுதாயம் உருவாகும் என்கிறார். ஒவ்வொரு ஆணின் முனேற்றமும், ஒரு பெண்ணாலேயே என்பர்.

எனவே ஆண்களின் முன்னேற்றத்திற்கு பெண்களே பின்னணியில் திகழ்கின்றார்கள் என்ற உண்மையை நாம் மறக்க கூடாது.

“தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை” என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது நாட்டை பொறுத்தவரையில் பெண்களே இன்று முன்னனியில் திகழ்கின்றனர். ஜனாதிபதி முதல் உயர் நீதிமன்றம் வரை பல்கலைக்கழகம் தொட்டு பாடசாலைகள் வரை பாராளுமன்றம் தொட்டு உள்ளுராட்சி சபைகள் வரை பெண்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதை காண முடிகிறது. இன்று பெண்கள் தம் அறிவாலும் ஆற்றலாலும் உழைப்பிலும், முன்னேற்றம் கண்டுவருகின்றனர். ஆடவர்க்கு நிகராகவும் சதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்**
**எட்டும் அறிவில் ஆணுக்கிங்கே பெண்**
**இணைப்பில்லைக் காண்”**

என்ற பாரதியார் பாடல் நினைவு கூறத்தக்கது.

S.Nivetha
Primary

# வீடு சொல்லும் பாடங்கள்

- ✳ **நம் வீட்டுக் கூரை நமக்குச் சொல்லும் இரகசியம் உன் நோக்கம் எப்பொழுதும் உயர்வானதாக இருக்கட்டும்.**
- ✳ **உலகைக் கவனி. அப்போது தான் நீ எந்த இடத்தில் இருக்கின்றாய் என்பது உனக்குப் புரியும். நம்வீட்டு ஜன்னல் சொல்லும் தகவல்.**
- ✳ **உன் குறிக்கோளில் எந்த தடையும் இல்லை. தட்டினால் திறக்கும். நம் வீட்டுக்கதவு சொல்லும் இரகசியம்.**
- ✳ **ஒவ்வொரு நிமிடமும் எமக்கு பொன் போன்றது. டிக்... டிக் ... என்று சத்தமிட்டுச் சொல்கிறது கடிகாரம்.**
- ✳ **சினம் வேண்டாம் எப்போதும் குளுமையாக இருக்கட்டும். நம் வீட்டு மின் விசிறி சொல்லும் பாடம்.**
- ✳ **போனதை நினைத்து கலங்காமல், ஒவ்வொரு நாளும் புத்துணர்ச்சிகொள் என்று சொல்கிறது நாட்காட்டி.**
- ✳ **சமூகத்தில் உன் இருப்பை பதிவு செய். முதலில் உன்னைப்பற்றி நீ நன்றாக புரிந்துகொள். நம் வீட்டு கண்ணாடி சொல்லும் இரகசியம் இது.**

S.Nivethiga
English Course

முயற்சி ஒன்று தான் உயிரின் அடையாளம். இயங்குதலின் சமிக்ஞை. காலம் ஒவ்வொரு மனிதனுக்கும் பூச்செண்டுகளைத்தான் தருகிறது. முள்களோடு விரல் கிழித்துக்கொள்வது முயற்சியற்றவர்களின் முட்டாள்தனம். சோம்பேறிகள் அதிஷ்டத்தினை நம்பி உறங்கிக்கிடக்கிறார்கள். ஊக்கமுடையோர் சிகரம் நோக்கி நகர்ந்து கொண்டே போகின்றார்கள் **“முயற்சி இல்லாத சோம்பல் மனம் பிசாசின் தொழிற்சாலை”** என்று ஆங்கில பழமொழி எடுத்துரைக்கும் வாழ்க்கைப் பயணத்தின் பின்புலத்தை சின்னப்பேனாவின் சிறுதுளி மையினால் ஈரப்படுத்திவிட முடியும் என்பது சாத்தியமில்லை.




முதுகெலும்பில்லாத சிலந்தி, தேனீ, எறும்பு போன்றவற்றையே முயற்சிக்கு உதாரணமாகக் கூறுகின்றோம். மனிதன் தேன் கூடுகளை சிதைக்கும் போதெல்லாம் தான் வென்றதாக நினைத்துக்கொள்கின்றான். அதை மீண்டும் கட்டி உடைக்கப் பட்டது மனிதனது தற்பெருமையே என தேனீ நிரூபித்து விடுகிறது. மனித வாழ்வை செதுக்கும் உளிகளாக பழமொழிகள் அமைந்துள்ளன. முயற்சி திருவினையாக்கும், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார், ஊக்கம் இன்றேல் ஆக்கம் இல்லை, ஊக்கமது கைவிடேல் போன்ற முதுரைகள் முயற்சியின் இன்றியமையாமைக்கான எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

“இன்று புதிதாய் பிறந்தோம் என்று நீவிர்எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு நின்று விளையாடி இன்புற்று வாழ்வீர் தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பிவாரா” என்று மகாகவி பாரதி முழங்குகிறார். காலத்தின் தரிசனம் காத்திரமானது. வாழ்வின் வசீகரங்களை அரட்டைகளிலும், தொலைக்காட்சிகளிலும், வீண் பொழுதுபோக்குகளிலும் தொலைத்து விடுதல் ஆரோக்கியமானதல்ல. கவிழ்ந்த பால் கலயம் ஏறுவதில்லை. “முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்” என்ற வள்ளுவனார் குறள் குன்றிலிட்ட தீபமாய் குவலயத்திற்கு வளம் சேர்த்து கொண்டிருக்கின்றது.

முயற்சி ஒரு தவம். அதில் மனம் மட்டுமன்று உடலும் பங்கெடுக்கின்றது. அகவை ஐம்பதிலும் அகிலத்தின் அரைப்பங்கினை அடிமைப்படுத்தி சரித்திரம் அறியாத சித்தாந்தத்தை செதுக்கிய யூலியசீசரை முயற்சியின் மொத்த வடிவமாகவே உலகம் நோக்கு கின்றது. ஆனாலும் தனிமனித முயற்சி சமுதாயத்தின் வளர்ச்சியை சிகரம் நோக்கி நகர்த்தும் வகையில் அமை யும் போதுதான் முழுமையடைகின்றது.

ஏழையாகப் பிறந்தும் உலக சரித்திரத்தை மாற்றி “மூலதனம்” எனும் நூலை எழுதிய “கால்மாக்ஸ்”, செருப்பு தைக்கும் தொழிலாளி மகனாய் உதித்து

அமெரிக்க அதிபராகி கறுப்பின மக்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய "ஆபிரகாம் லிங்கன்", வறுமைச் சங்கிலியை அறுத்து எறிந்து சர்வதேச சக்கரவர்த்தியாகிய "நெப்போ லியன்", அகிம்சையை ஆயுதமாக்கி வெற்றி கண்ட இந்திய தேசபிதா "மகாத்மாகாந்தி", கோடீஸ்வரி வீட்டில் வேலைக் காரியாக இருந்து தளராத முயற்சியோடு முன்னேறி இரு முறை நோபல் பரிசு வென்ற "மேரிகியூரி", உலகிற்கே ஒளி கொடுத்த "எடிசன்", பத்திரிகை விற்று படித்த "அப்துல்கலாம்" போன்றோர் விடாமுயற்சியினால் உலக வரலாற்றில் உன்னத இடத்தை அடைந்திருக்கிறார்கள்.

பாறை இடுக்கில் வீழ்ந்த சிறுவிதை கூட முட்டிமோதி பாறையைப் பிளந்து விருட்சமாகும் வீரியத்தை பெற்று விடுகின்றது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது யப்பான் நாட்டின் மீது அணுகுண்டு தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. முக்காடிட்டபடி மூலையில் முடங்கிக் கிடந்தார்களா யப்பானியர்? இல்லவே இல்லை! முயற்சியோடு முன்னேறினார்கள் இன்று உற்பத்தியில் முதற்தர நாடாக யப்பான் திகழ்கின்றது.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்" இறைநியதியினை மனித முயற்சியி னால் கட்டுடைப்புச் செய்யலாம் எனத் தெய்வப்புலவர் கூறுவதே முயற்சியின் உச்சநிலையை உணர்த்தி விடுகின்றது. வானம் வசப்படும். தடைகளைத் தாண்டி நம் பயணத்தைத் தொடர முயற்சி என்னும் ஒற்றை சொல்லை நாராக்கி பூத்தொடுத்து வாகை சூடுவோம்.

**S.Nivetha - Primary**

# Value of teachers in the society

In the Construction of a heathy Society, Cach and every Profession plays a Specific role. Doctors, engineers farmer, businessmen, and soldiers in the society perform a particular. task, but a teacher shoulder above them.

A Teacher is the backbone of the society because he or She imparts knowledge and education and builds up the Younger generation. Teacher shapes and carves out the Students, who are the builders of tomorrow and the future hopes of the nation. They give us powers to delude what path to take which is beneficial for us. Their main task is not only teaching but also children for better tomorrow.

Overall, teachers always remind their students they have come a long way from where they've started. The monitor every minute progress of the students and act as a Confidence booster forever Therefore, value of teacher is immeasurable in society.

**K Thaadchayani**
**English Course**

# அனுபவம்தான் குரு

உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே. நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். அதையும் பெரிது பண்ணாதே. உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள்....

ஒவ்வொரு மனிதனும் தனித்தனி ஜென்மங்கள். அவர்களுக்கென்று தனித்தனி ஆசாபாசங்கள் இருக்கும். குணங்களும் இருக்கும். அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும்.

அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள். அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும்.

அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது.

இதுதான் வாழ்க்கையின் உண்மை...

அவர்களது பூர்வ புண்ணியத்தின் அடிப்படையில்தான் அவர்களின் குணங்களும் செயல்களும் இருக்கும். அது உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேர்த்திகளாக இருந்தாலும், உறவுகளாக இருந்தாலும், அவர்களது பிறவி குணம் ஒரு போதும் மாறாது. எதைச் செய்ய வந்தார்களோ அதை செய்வதுதானே அவர்களின் விதி.

இதை நீ மாற்றி அமைக்க முடியுமா?..

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்!....

பந்த பாசத்தில் உள்ளே விழுந்து அறிவுரை சொல்லுகிறேன் என்று கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டிருக்காதே...

அவர்களுக்கு அனுபவம் தான் குரு.

அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை திருத்திக் கொள்வார்கள். அதுவரை நீ பொறுமை-யாக இரு..

செயற்கையாக ஒரு குணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும் தான் யார்?, தன் குணம் என்ன?, என்பதை ஒருநாள் வெளிப்படுத்தி விடுவார்கள். எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள்.

நாம் வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம்.. கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத் தவிர வேறு எதையும் செய்து காட்ட முடியாது. எல்லையில்லாத அன்பை வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே.

கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் இறைவன். அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது. இயற்கையின் சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக்கொண்டு வாழப் பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும் ,தீமை வந்தாலும் ,உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும் .அதை வைத்து உன்னையும் திருத்திக் கொள்ளலாம்.

இன்பமானாலும் துன்பமானாலும் அதை நீயே சந்திக்க கற்றுக்கொள். அதை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணையைத் தேடாதே.

உன் இன்ப துன்பத்தில் பங்கு பெறுவதற்கு இந்த பிரபஞ்சத்தில் ஒருவர் பிறந்திருந்தால் நிச்சயம் அவர் உன்னை கைவிடாமல் உன்னோடு சேர்ந்தே பயணிப்பார்.

அது உன் பிறவி பிராப்தத்தை பொறுத்து இருக்கிறது அப்படி அது நடந்து விட்டால், எந்த சூழ்நிலையிலும் உன்னோடு இணைந்தே இருப்பார்.

பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பத்தை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள்.

மனிதன் மீது வைக்கும் நம்பிக்கையை விட இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்.

உன் கண்ணீரும் உன் கவலையும் உன்னை பலவீன மாக காட்டிவிடும்...


அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை.

எப்படி இருந்தாலும் நீதான் அந்த சுமையை சுமந்து ஆகவேண்டும். அழுது சுமப்பதை காட்டிலும். ஏற்று சுமப்பது உனக்கு சிரமம் இல்லாமல் இருக்கும்.

தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள்.

இந்த பக்குவத்தை அடைந்துவிட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்.

உனக்கு தெரிந்த வரை நீ அறிந்த வரை யாருக்கும் எந்த உயிருக்கும், எந்த வகையிலும் நன்மை மட்டுமே செய்...




- நன்றி முகநூல் -

# உன்னை அறிந்தால்...

ஒருநாள் ஆபிசில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று பார்க்க சென்றனர்.

அதில் *“உங்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார், அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்”* என்று எழுதி இருந்தது.

நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டிடத்திற்கு சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர்.

சவப்பெட்டியை நெருங்க நெருங்க நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும். நல்ல வேளை அவன் இறந்துவிட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கி சென்றனர்.

சவப்பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டியுள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது...

”உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம், நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது, உங்கள் வளர்ச்சியை உங்களை தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது” என்றிருந்தது.




உங்கள் வாழ்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது, உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது.

நீ நினைத்தால் மட்டுமே உன் வாழ்வை மாற்ற முடியும்.

- நன்றி முகநூல் -

## பேசும் படங்கள்...!




A.Anet - Art Course -

# புத்-தகம்

கல்(ஆ)வ தனையும் கற்பக விருட்சமாய்
ஆதவனும் நுழையாவிடினும் ஒளிசுமந்திரும்
மரகத மாணிக்கமாய்
உரு கொண்ட சதைப்பிண்டத்தை
உலகின் சபை நடுவே அமரவைக்கும் அரியணையாய்
மீண்டும் என்னைப் பிறக்க வைத்த - என்
தாயாய் தந்தையாய் தாயாதியாய்......

புலவனாய், அறிஞனாய், வைத்தியனாய், வழக்கறினனாய்
ஆசிரியனாய், பொறியியலாளனாய், அரசியல்வாதியாய்
பல வகையானபோதும் உன்னருகே மாணாக்கனாய்
நல் மானிடனாய் மலர்ந்திட
கழனிக்காட்டில் கட்டவிழித்து விட்டவனையும்
இன்று கணினியின் மடியில் தவிழ விட்ட
இறையவன் நீ - பார்வையற்ற பாதையில்
தடம் புரண்ட போதிலும் ஆசானாய் உருமாறி
என்னை அரியணையில் அமரவைத்தை அட்சயம் நீ
அதில் அட்சரம் நீ... - புத்தகம் -

தி.துவாரகா
கணிதப் பிரிவு